# உமிழ்நீர் சேகரிப்பு அறிவுறுத்தல்கள்

உங்கள் சட்ட விவரங்களுடன் கோரிக்கையை முழுமையாக நிரப்பவும். இந்த நேரத்தில் விருப்ப பெயர்களை நாங்கள் ஏற்பதில்லை.

குறிப்பு: கோரிக்கையில் உள்ள சட்ட முதற்பெயர் மற்றும் கடைசிபெயர் மற்றும் பிறந்த தேதி போன்றவை மாதிரியில் உள்ள லேபிள் உடன் பொருந்த வேண்டும்.

**அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படவேண்டும் இல்லையெனில் மாதிரிகள் செயல்படுத்தப்படமாட்டாது.**




1 உங்கள் மாதிரியை வழங்குவதற்கு முன் 30 நிமிடங்களுக்கு சாப்பிடவோ, குடிக்கவோ அல்லது கம்மை மெல்லவோ, புகப்பிடிக்கவோ அல்லது வேப் செய்யவோகூடாது.

- உங்கள் சட்ட விவரங்களுடன் சோதனைக்கூட கோரிக்கையை முழுமையாக நிரப்பவும்.



2 பையில் இருந்து பேக்கேஜை எடுத்து, பேப்பர் பேக்கை பிரித்து திறக்கவும். உள்ளே நீங்கள் இரண்டு துண்டுகளைப் பார்க்க முடியும் - நீல திரவத்தில் ஒரு மூடி மற்றும் மேலே பனல் இணைக்கப்பட்ட கொள்கலன்.



3 உங்கள் வாயில் உள்ள உமிழ்நீரை விழுங்காமல், பனல் உள்ள கொள்கலனில் மெதுவாக உமிழ்நீரை உமிழவும்.




4 ‘இதுவரை உமிழவும்’ என்ற கருப்பு வரி வரும்பரை நீங்கள் போதுமான அளவு உமிழ்நீரை கொள்கலனில் நிரப்ப வேண்டும். உமிழ்நீரில் ஏதேனும் நுரைகள் இருந்தால் அது மொத்த அளவில் கணக்கிடப்படமாட்டாது. உமிழ்நீரானது கருப்பு வரியில் இருப்பதையும், நுரைகள் அதற்கு மேலே இருப்பதையும் உறுதி செய்யுங்கள். இது சில நிமிடங்கள் எடுக்கக்கூடும், அதனால் தொடர்ந்து பயன்படுத்துங்கள்.



5 நீங்கள் போதுமான உமிழ்நீரை சேகரித்த பிரியாகு, பனலை சுழற்றி குப்பையில் எறியவும்.




6 நீல திரவத்துடன் கூடிய மூடியை கொள்கலனில் வைத்து மூடவும். மூடியானது சரியாக மூடி இருப்பதை உறுதி செய்து, “கிளிக்” சப்தம் வரும்வரை சுழற்றவும், நீல திரவம் கொள்கலனில் கலக்கும். இந்த செயல்முறையை செய்யும்போது உங்கள் பெற்றோர் அல்லது பெரிய வயதுடையவர்களை உதவிக்கு கொண்டிருங்கள்.



7 எல்லாவற்றையும் கலக்க கொள்கலனை 3-5 முறை ஆட்டவும்.




8 உங்கள் சட்ட முதற்பெயர் மற்றும் கடைசிபெயர் மற்றும் பிறந்த தேதியுடன் லேபிள் செய்து, உமிழ்நீர் மாதிரி கொள்கலனில் நீளவாக்கில் ஒட்டவும்.




9 இதனுடன் வந்த பையில் லேபிள் செய்யப்பட்ட உமிழ்நீர் மாதிரியை வைக்கவும். பையில் வெளிப்புற பாக்கெட்டில் உங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை படிவத்தை வைக்கவும்.

சேகரிக்கப்பட்ட 24 மணிநேரத்திற்குள் உங்கள் உகந்த இடத்தில் உமிழ்நீர் மாதிரியை அளிக்கவும். இதனை அறை வெட்பநிலையில் வைக்கலாம், குளிரூட்டப்படவேண்டாம்.

---

சிறு குழந்தைகளுக்கான வேடிக்கை உதவி குறிப்புகள் மற்றும் மேலும் தகவல்களுக்கு, எங்கள் உமிழ்நீர் வீடியோவை பார்க்க QR குறியீட்டை ஸ்கேன் செயாவும் அல்லது இதைப் பார்க்கவும்: **https://youtu.be/Ru-vFZdImes**

SickKids®

எவ்வாறு ஸ்கேன் செய்வது: உங்கள் போனில் உள்ள கேமராவை திறந்து, குறியீட்டின் மீது வைத்து, தோன்றும் பேனரை தட்டவும்.